# DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,
KRISHNAGIRI.

| | | |
|---|---|---|
| Sessions | : | C.C. No. 250 of 2022<br>CNR No.TNKI02-004032-2022 |
| Deposition of witness for | : | PW1 |
| Name | : | திரு. மதுசந்தன் |
| Father's Name | : | ஜெயராமப்பா |
| Village | : | மருதாண்டபள்ளி |
| Taluk | : | சூளகிரி |
| District | : | கிருஷ்ணகிரி |
| Calling | : | PW1 |
| Religion | : | Hindu |
| Profession | : | தனியார் கம்பெனியில் வேலை |
| Age | : | 28 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 14th day of October 2022.

<u>முதல் விசாரணை :-</u>

நான் தனியார் கம்பெனியில் வேலை செய்து வருகிறேன். இறந்த நபர் எனக்கு அக்கா ஆக வேண்டும். அவர் எனக்கு பெரியப்பா மகள் ஆவார். இறந்த மற்றொரு நபர் வெங்கடேசன் எனக்கு அக்கா மகன் ஆவார். விபத்து நடந்த பிறகு எனக்கு எனது அப்பாவும், பெரியப்பாவும் தகவல் கொடுத்தார்கள். மேற்படி எனது அக்கா மற்றும் அக்கா மகன் ஆகியோர் விபத்திற்குள்ளாகி கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனையில் இருக்கிறார்கள் என்று தகவல் சொன்னார்கள். அவர்கள் எங்கிருந்து எங்கு சென்றார்கள், எந்த வாகனம் மோதி விபத்து ஏற்பட்டது என்று எனக்கு தெளிவாக தெரியாது.

தகவல் கிடைத்து நான் கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனை சென்று பார்த்தேன். அப்போது ஜமுனா மற்றும் அவரது குழந்தை வெங்கடேசன் ஆகியோர் இறந்திருந்தார்கள். மற்றொரு குழந்தை வேலன் (எ) வேல் முருகனை பெங்களூர் மருத்துவமனைக்கு அனுப்பியிருந்தார்கள். அந்த குழந்தையும் சிகிச்சைக்கு பிறகு இறந்துவிட்டது. இந்த விபத்து சம்மந்தமாக காவல் நிலையத்தில் ஜமுனாவின் மாமனார் புகார் கொடுத்தார், அவர் பெயர் தெரியவில்லை. பின்பு காவல் ஆய்வாளர் மேற்படி பிரேதத்தின் மீது விசாரணை செய்த போது நான் சாட்சியாக இருந்தேன். இது சம்மந்தமாக காவல்துறையினர் என்னை விசாரித்தார்கள். நான் நடந்ததை கூறினேன்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :-</u>

நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை.

<u>மறு விசாரணை :-</u>

இல்லை.

# DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,
KRISHNAGIRI.

| | | |
|---|---|---|
| Sessions | : | C.C. No. 250 of 2022<br>CNR No.TNKI02-004032-2022 |
| Deposition of witness for | : | PW2 |
| Name | : | திரு. முனியப்பா |
| Father's Name | : | ராமப்பா |
| Village | : | வரதாபுரம் |
| Taluk | : | சூளகிரி |
| District | : | கிருஷ்ணகிரி |
| Calling | : | PW2 |
| Religion | : | Hindu |
| Profession | : | ஓட்டுனர் |
| Age | : | 38 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 14th day of October 2022.

<u>முதல் விசாரணை :-</u>

நான் ஓட்டுனராக பணிபுரிந்து வருகிறேன். விபத்தில் இறந்து போன ஜமுனா எனது அண்ணி ஆவார். வெங்கடேசன் மற்றும் வேல்முருகன் ஆகியோர் ஜமுனாவின் பிள்ளைகள் ஆவார்கள். விபத்து குறித்து எங்களுக்கு அரசு மருத்துவமனையில் 2 வருடத்திற்கு முன்பு தகவல் கொடுத்தார்கள். விபத்து நடந்தது என்று தகவல் கொடுத்தார்கள். பிறகு கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கு சென்று இறந்து போன இரண்டு சடலங்களை என் பெரியப்பா வெங்கடப்பா என்பவர் பெற்றுக்கொண்டார். நான் அப்போது உடனிருந்தேன். எந்த இடத்தில் எந்த வாகனம் மோதி விபத்து ஏற்பட்டது என்பது குறித்து எனக்கு தெரியாது.

காவல் ஆய்வாளர் பிரேத விசாரணை செய்த போது நான் சாட்சியாக இருந்தேன். இதுகுறித்து காவல்துறையினர் என்னை விசாரித்தார்கள். நான் நடந்ததை கூறினேன்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :-

சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை.

மறு விசாரணை :-

இல்லை.

S RAJASIMMAVARMAN

CHIEF JUDICIAL MAGISTRATE
Digitally signed by S RAJASIMMAVARMAN
DN: cn=S RAJASIMMAVARMAN, ou=KRISHNAGIRI, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=TAMILNADU, c=IN

தலைமை குற்றவியல் நடுவர்,

கிருஷ்ணகிரி.